DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No.05/2015**

| Deposition of the for | : | PW 1 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரெத்தினம் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of January 2023.
07.01.2023.

முதல் விசாரணை:-

1. நான் திருச்சி கே.கே நகரில் வசித்து வருகிறேன். LIC முகவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 11.02.2015-ம் தேதி இரவு 07.00 மணிக்கு SS கிராண்ட் லாட்ஜில் தங்கினோம். காலையில் எழுந்து பார்க்கும்போது நகையை காணவில்லை. அந்த நகையை நான் கருப்பு பையில் போட்டு வேறு ஒரு பேக்கில் வைத்திருந்தேன். நகை சுமார் 100 பவுனுக்கு மேல் இருக்கும், 5 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் எவ்வளவு என்று சரியாக தெரியவில்லை.பின்பு நான் தேடி பார்க்கும்போது ஜன்னலில் கம்பி இல்லாமல் இருந்தது. அதுவழியாக உள்ளே வந்து திருடியிருக்கிறார்கள். பின்பு தேடி பார்த்துவிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் விசாரணை செய்து எதிரியை பிடித்து நீதிமன்றத்தில் நகையை ஒப்படைத்துவிட்டார்கள். பின்பு நான் மனு செய்து நீதிமன்றத்தில் இருந்து நகையை வாங்கிவிட்டேன்.

2. டிரைவர் திருடியதாக கேள்விபட்டேன்.நீதிமன்றத்தில் வைத்து தான் பார்த்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. அது நான் கொடுத்த புகார்தான். அந்த புகார் மனு அ.சா.ஆ-1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தங்கி இருந்த ரூம் சூட் ரூம் என்றால் சரிதான். அந்த சூட் ரூம் 3 அறைகளாக இருக்கும் என்றால் சரிதான். கருப்பு கலர் பையில் வைத்து hand bag ல் இருந்த நகையை யாருடைய பாதுகாப்பில் இருந்தது என்றால் எனது மனைவியின் பாதுகாப்பில் இருந்தது. ஜன்னலில் கம்பி இல்லை, கண்ணாடி கதவு இருந்தது. ரூம்பிற்குள் உள்ளே இருந்தால் ஜன்னல் கண்ணாடி கதவை பூட்டி இருக்கலாம் என்றால் எங்களுக்கு தெரியவில்லை திறை போட்டு மறைக்கப்பட்டிருந்தது.

2. புகார் கொடுக்கும் போது எத்தனை மணி என்றால் சுமார் 09.00 மணிக்கு மேல் இருக்கும். போலீசார் என்னை சம்பவ தினத்தை தவிர்த்து வேறு என்றாவது என்னை விசாரித்தார்களா என்றால் ஞாபகம் இல்லை.நான் மனு தாக்கல்செய்து நீதிமன்றத்தில் இருந்து பெற்ற நகைகளும், புகாரில் சொல்லியுள்ள நகைகளும் வேறு வேறு என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No.05/2015**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 2 | Caste | : | |
| Name | : | ஜான்சி ராணி | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of January 2023.
07.01.2023.

முதல் விசாரணை **:-**

1. நான் திருச்சி கே. கே நகரில் வசித்து வருகிறேன். வீட்டுகுடித்தனம் செய்து வருகிறேன். நாங்கள் 10.02.2015-ம் தேதி தஞ்சாவூர் கோவிலுக்கு போய்விட்டு, 11.02.2015-ம் தேதி இராமேஸ்வரம் கோவிலுக்கு வந்தோம்.இரவு 12.00 மணிக்கு மேல் வந்து SS Grand ல் தங்கினோம். எனது ஹேன்பேக்கில் கருப்பு பையில் வைத்து நகைகளை உள்ளே வைத்திருந்தேன்.காலையில் 06.00 மணிக்கு பார்க்கும் போது நகையை காணவில்லை. தேடி பார்த்துவிட்டு எனது கணவரிடம் சொன்னேன்.அவரும் சேர்ந்து சென்று ஜன்னல் பக்கத்தில் பார்த்தபோது, ஜன்னல் கம்பி இல்லாமல் இருந்தது. எட்டி பார்த்தபோது பணம் கீழே கிடந்தது. அப்போது தான் யாரோ வந்து நகையை எடுத்துள்ளார்கள் என்று தெரியவந்தது. பின்பு லாட்ஜில் சொன்னோம். அவர்கள் சிசிடிவி கேமராவில் பார்த்தார்கள். ஆள் நடமாட்டம் தெரிந்தது.அந்த கேமராவில் நகையை எடுத்தது அந்த பையன் டிரைவர் என்பது கண்டுபிடித்தார்கள்.

2. அதன்பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீஸ் வந்து கேமராவை பார்த்து அந்த டிரைவரை கூப்பிட்டுவந்தவர்களுக்கு போன் செய்து அவரை கூப்பிட்டுவரும்படி சொன்னார்கள்.அதன்பின்பு போலீஸ் பிடித்து விசாரித்தனர் முதலில் இல்லை என்றார் பின்பு அவர்தான் எடுத்ததாக சொன்னார். நகையை கொடுத்துவிட்டார்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நாங்கள் தங்கிய அறை கீழ் தளத்தில் தான் இருந்தது என்றால் சரிதான். நகை இருந்த பேக்கை என்னுடைய பாதுகாப்பில் தான் வைத்திருந்தேன் என்றால் சரிதான்.சூட் ரூம் என்பதால் லாக்கர் வசதி

இருந்ததா என்றால் தெரியவில்லை. அதில் நகையை வைக்காமல் இருந்ததற்கு காரணம் என்ன என்றால் தெரியவில்லை.  சிசிடிவி கேமராவை பார்க்கும் போது மணி என்ன என்றால் காலை 07.00 மணி இருக்கும்.போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 07.30 மணிக்கு வந்தார்கள். நகையை எதிரி எத்தனை மணிக்கு கொண்டு வந்து கொடுத்தார் என்றால் லாட்ஜில் வைத்து கொடுத்தார் எத்தனை மணி என்று ஞாபகம் இல்லை, மாலையில் கொடுத்தார்.

2. எனது பாதுகாப்பில் இருந்த நகையை லாட்ஜின் வரவேற்பு அறையில் துலைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. மறுநாள் ஞாபகம் வந்து எனது கணவரை வைத்து புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. லாட்ஜிலேயே நகையை வாங்கி கொடுத்தால் உண்மையான எதிரி யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் , இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No.05/2015**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 3 | Caste | : | |
| Name | : | தீப நிரஞ்சனா | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of January 2023.
07.01.2023.

முதல் விசாரணை:-

1. நான் திருச்சி கே. கே நகரில் வசித்து வருகிறேன். எனது தகப்பனார் உடன் தொழில் செய்து வருகிறேன்.கடந்த 11.02.2015-ம் தேதி இரவு 07.00 மணிக்கு குடும்பத்துடன் இராமேஸ்வரம் வந்தோம் SS grand ஹோட்டலில் ரூம் எடுத்து தங்கினோம். இரவு தூங்கிவிட்டோம் மறுநாள் காலையில் எழுந்து பார்க்கும்போது 09.00 மணிக்கு பெட்டிக்குள் வைத்திருந்த நகையை காணவில்லை.11.00 மணிக்கு போலீசார் வந்தார்கள். அது சம்பந்தமாக எனது அப்பாவிடம் விசாரித்தார்கள்.அப்பா தான் புகார் கொடுத்தார்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலீசார் விசாரணையில் தற்போது சொன்னதை தான் சொன்னோன் என்றால் சரிதான்.